மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்

பொருள்:– தன் அன்பர்களின் உள்ளமாகிய மலரில் வீற்றிருக்கும் இறைவனின் சிறந்த திருவடிகளை நினைப்பவர் இவ்வுலகில் நீண்டநாள் வாழ்வார்.

.பழநி நகராட்சி

2021–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13 –ஆம் நாள் திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் பழநி நகராட்சியில் சாதாரணக் கூட்டம் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெறும்.

நகராட்சி அலவலகம், பழநி. தனி அலுவலர்
நாள்.13.09.2021 பழநி நகராட்சி

**கூட்டப்பொருள்**

1) தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2021–2022–ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் நகராட்சி நிரவாக துறை மான்ய கோரிக்கையின் போது அறிவிப்பு 13–ல் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் ஒரு நவீன எரிவாயு தகன மேடை அமைக்கப்பட வேண்டுமென்ற இவ்வரசின் கொள்கைக்கேற்ப தற்போதுள்ளவற்றுடன் முதற்கட்டமாக நடப்பாண்டில் 75 தகன மேடைகள் ரூ.112.50/– கோடி மதிப்பீட்டில் நவீன தகன மேடைகளாக மாற்றப்படும் எனவே,அறிவிப்பு 13–ல் தெரிவித்துள்ளவாறு அனைத்து நகராட்சியிலும் நவீன தகன மேடைகள் அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கையுடன் கூடிய கருத்துருவினை சமர்ப்பிக்க நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்கள் கடிதம் ந.க.எண்.14006/2021/திி2–2 நாள்.09.09.2021–ல் வரப்பெற்றதை தொடர்ந்து பழநி நகராட்சிக்கு சொந்தமான புல எண்.346–ல் உள்ள சண்முகநதி தகன மேடையை LPG (Liquid Petroleum Gas) நவீன தகன மேடையாக மாற்றி அமைக்க விரிவான திட்ட மதிப்பீட்டு தொகை ரூ.157.00/–இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கு அரசு தொகை ரூ.150.00/– இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ.6.00/– இலட்சத்தை பொது நிதியில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.
2. இப்பணிக்கு அரசு தொகை ரூ.150.00/– இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது மீதமுள்ள தொகை ரூ.6.00/– இலட்சத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2) பழனி நகராட்சிக்குட்ட ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் உள்ள மேற்கு பக்கம் உள்ள 21'6"x 21'6" அளவுள்ள வகுப்பறையை பொது நூலகம் அமைத்துக் கொள்ள திரு.ஞா.விக்டர்தேவசகாயம், சமூக தொண்டர்,11,ரெங்கநாதன் நகர், கிரேஸ் அவென்யூ, சேலையூர், தாம்பரம்–1 என்பவர் விண்ணப்பித்துள்ளதன்படி சார்ஆட்சியர் அவர்களின் ஓ.மு.கடித எண்.9143 /2018/அ6,நாள்.05.01.2019ல் உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப் பட்டதன்படியும், மாவட்ட நூலக அலுவலர், திண்டுக்கல் அவர்களின் கடிதம் சி.செ.ப.எண்.957/இ/2002, நாள்.01.08.2019, ந.க.எண்.1714/இ/2019, நாள்.13.09.2019–ல் நூலகம் செயல்பட ஏதுவாக காலியாக இருப்பின் அதில் இரண்டு வகுப்பறைகளை ஒதுக்கித்தருமாறு கேட்டுக் கொண்டுள்ளதன்படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் கடிதத்தின் படியும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.12734/2020/டிபி3, நாள்.13.05.2021ல் தெரிவித்துள்ளதன்படியும், அரசு கூடுதல் செயலாளர், சென்னை அவர்களின் கடிதம் எண்.16912/ந.நி.4/(1)/2021–1,நாள்.09.09.2021–ல்தக்கநடவடிக்கை எடுக்க கோரியுள்ளதன்படியும், பொதுப்பணித்துறை விலை விகிதத்தின்படி மாத வாடகை ரூ,6150/–என நிர்ணயம் செய்து நகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் வார்டு எண்.3, பிளாக் எண்.28, நகரளவு எண்.7–ல் மேற்கு பக்க கட்டிடத்தின் வடக்கு பகுதியறையினை (8.50 மீx7.00 மீ) நூலக பயன்பாட்டிற்கு பயன்படுத்திக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : அனுமதிக்கலாம் **(ந.க.எண்.56/2018/எப்1)**.

3) தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2021–2022 –ம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாக துறை மான்ய கோரிக்கையின் போது அறிவிப்பு 13–ல் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் உள்ள பூங்காக்களை மேம்படுத்த வேண்டுமென்ற கொள்கைக்கேற்ப நடப்பாண்டில் 552 பூங்காக்கள் ரூ.122.00 கோடி மதிப்பீட்டில் பூங்காக்களை மேம்படும் என அறிவிப்பு 13–ல் தெரிவித்துள்ளவாறு அனைத்து நகராட்சிகளிலும் பூங்காக்களை மேம்படுத்துவதற்கு விரிவான திட்ட அறிக்கையுடன் கூடிய கருத்துருவினை சமர்பிக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20028/2021/தி2–2, நாள். 08.09.2021–ல் வரப்பெற்றதை தொடர்ந்து பழநி நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.4, பிளாக் எண்.49, நகரளவை எண்.4/13 & மற்றும் 4/14–ல் அமைந்துள்ள உள்ள ஐஸ்வரியா நகர் பூங்காவை மேம்படுத்துவதற்கு விரிவான திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.48.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்
2) நகராட்சியில் போதிய நிதி இல்லாததால் முழு மானியமாக வழுங்கக்கோரி, நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு கருத்துரு சமர்ப்பித்து நிதி மற்றும் நிர்வாக அனுமதி பெற்று பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ந.க.எண். 35871/2014/E1 நாள்.08.09.2021 ன் கடிதத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் 2021–22 ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரில் நகராட்சி நிர்வாகத் துறை மானியக்கோரிக்கையில் நகராட்சிப் பகுதிகளில் உள்ள தெருவிளக்குகளை LED விளக்குகளாக மாற்றம் செய்ய வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளதால் அதற்கான கருத்துரு சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**<u>இந்நகராட்சியில் தற்போது உள்ள தெரு விளக்கு விபரம்</u>**

| | | |
|---|---|---|
| 40 w TL | 1078எண்ணங்கள் | மதிப்பீடு தொகை ரூ,3,80,00,000/– (ரூபாய் முந்நூற்று எண்பது லட்சம் மட்டும்) |
| 1x24w CFL | 1168 எண்ணங்கள் | |
| 4x24w CFL | 518 எண்ணங்கள் | |
| SVL | 340 எண்ணங்கள் | |
| 110 w High Mast | 110 எண்ணங்கள் | |
| மொத்தம் | 3214 எண்ணங்கள் | |

**<u>இந்நகராட்சியில் கூடுதலாக அமைக்கப்பட உள்ள தெரு விளக்குகள் விபரம்</u>**

| | | |
|---|---|---|
| பழநி நகராட்சி விஸ்தரிப்பு பகுதிகளில் அமைக்கப்பட உள்ள புதிய LED மின்சிக்கன விளக்குகள் | 515எண்ணங்கள் | மதிப்பீடு தொகை ரூ,45,00,000/– (ரூபாய் நாற்பத்தி ஐந்து லட்சம் மட்டும்) |

இந்நகராட்சிப் பகுதியில் மேற்காணும் விவரப்படி தெருவிளக்குகளை மின் சிக்கனம் LED விளக்குகளாக ரூ.425 இலட்சம் மதிப்பீட்டில் மாற்றம் செய்தவற்கான பணி மேற்கொள்வதற்கு தனி அலுவலரின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடம மேற்காணும் பணி மேற்கொள்வதற்கான திட்ட பிரேரணை சமர்ப்பித்து நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி பெற நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

**ந.க.எண்.4475/2021/E1**

5) இந்நகராட்சிக்கு சொந்தமான வ.உ.சி.விஸ்தரிப்பு பேருந்து நிலையத்தில் 110 சதுரடி அளவு கொண்ட ஏசிசி செட் அமைத்த தற்காலிக கடை எண்.61 மாத வாடகைக்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமத்திற்கு 17.09.2021 ஆம் நாளன்று நடைபெற்ற ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கலந்த கொண்டவர்களின் விவரம் கீழ்க்கண்டவாறு,

உரிம இனத்தின் பெயர்: பழநி நகராட்சிக்கு சொந்தமான வ.உ.சி. விஸ்தரிப்பு பேருந்து நிலையத்தில் 110 சதுரடி அளவு கொண்ட ஏசிசி செட் அமைத்த தற்காலிக கடை எண்.61 மாத வாடகைக்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமம்.

ஏலம்

| வ.எண் | ஏலம் அளித்தவரின் பெயர் மற்றும் விலாசம் | ஏலத் தொகை (மாதம் ஒன்றிற்கு) |
|---|---|---|
| 1 | திரு.எ.ரபீக் ராஜா,<br>த/பெ.அப்துல் காதர்,14, முகம்மதியர் தெரு, நெய்க்காரப்பட்டி, பழநி | ரூ.18,100/- |
| 2 | திரு.எம்.இ.மெதார் மைதீன்,<br>17, காஜிமார் தெரு, பழநி | ரூ.18,000/- |

ஒப்பந்தப்புள்ளி

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் மற்றும் விலாசம் | ஒப்பந்தப்புள்ளி தொகை (மாதம் ஒன்றிற்கு) |
|---|---|---|
| 3 | திருமதி.எம்.மெகராஜ் பேகம்,<br>17, காஜிமார் தெரு,பழநி | ரூ.21,786/- |
| 4 | திரு.மு.ஷேக் அப்துல் காதர்,<br>த/பெ முகமது இப்ராகிம்,<br>17, பெரிய மஜீத் கிழக்கு தெரு,பழநி | ரூ.17,550/- |

மேற்கண்டவாறு நடைபெற்ற ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட நபர்களில் வரிசை எண்.3-ல் கண்டுள்ள திருமதி.எம்.மெகராஜ் பேகம், 17, காஜிமார் தெரு,பழநி என்பவர் மாதம் ஒன்றிற்கு ரூ.21,786/-க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி தொகை அரசு மதிப்பு ரூ.25,500-ஐ காட்டிலும் ரூ.3,714/- குறைவாக உள்ளது. கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வியாபாரம் பாதித்துள்ளது. எனவே, மறுஏலம்/மறுஒப்பந்தப்புள்ளி கோருவதினால் ஏற்படும் கால தாமதத்தை தவிர்க்கும் பொருட்டும், 2-வது முறையாக ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதாலும், திருமதி.எம்.மெகராஜ் பேகம், என்பவரின் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.21,786/-ஐ ஏற்க மன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலுகக்குறிப்பு :

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.நகராட்சி நிதி நிலையினை உயர்த்தும் பொருட்டு முன் அனுமதி பெறப்பட்டு குத்தகை உரிமம் ஒப்படைக்கப்பட்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4512/2020/அ1)

6) நகராட்சி நிர்வாகம் ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.3909/2018/J1 நாள்.23.04.2018-ன்படி, பழநி நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 33 வார்டுகள் கொசுப்புழு ஒழிப்பு(DBC), புகைமருந்து தெளிக்க, காய்ச்சல் கணக்கெடுப்பு மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் தனியார் ஒப்பந்தம்(Out Sourcing) மூலம் பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கியதின் அடிப்படையில், பழநி நகராட்சி ஆணையர் செயல்முறை ஆணை ந.க.எண்.2127/2016/எச்2 நாள்.30.09.2020-ன்படி, டெங்கு கொசுப்புழு ஒழிப்பு திட்டப்பணிக்காக **HMR Man Power Solution, Oddanchatram** என்ற நிறுவனத்தார் மூலம் 66 ஒப்பந்த பணியாளர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி அந்நிறுவனத்தின் ஒப்பந்தகாலம் 30.09.2021-வுடன் முடிவடைகிறது. எனவே, புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி இறுதி செய்யும் காலஅளவு வரை அல்லது 01.10.2021 முதல் 30.09.2022 வரை ஒரு வருட காலத்திற்கு பணிகள் கால தாமதமின்றி செயல்படுத்த பொது சுகாதார அவசர அவசியம் கருதி ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள விலைவிகித அடிப்படையில் பணிநீட்டிப்பு செய்து ஏற்கனவே பணி ஆணையில் குறிப்பிட்டுள்ளபடி, நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு ரூ.500/- வீதம் மற்றும் காப்பீடு இதர வரி பிடித்தங்கள், சீருடை (ஊதியத்தில் 5%), பாதுகாப்பு உபகரணங்கள், தளவாட பொருட்கள்(ஊதியத்தில் 5%)மற்றும் நிர்வாக செலவினம் (ஊதியத்தில்

5%)மற்றும் இதர செலவினங்களுக்கு சேர்த்து ஒரு வருட காலத்திற்கு ஆகும் மொத்த உத்தேச செலவின தொகை ரூ.1,44,25,000/-ஐ (ஒரு கோடியே நாற்பத்து நான்கு இலட்சத்து இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், பணி ஆணை வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் தனிஅலுவலர் அவர்களின் கூட்டத்தில் கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| ஊதியம் (EPF உட்படEmploy & Employee contribution)<br>(500 x 66 x 365) | 1,20,45,000 |
| ESI (ஊதியத்தில்4.75%) (23.75 x 66 x 365) | 5,72,138 |
| காப்பீடு, இதர வரி பிடித்தங்கள், சீருடை 5% ஊதியத்தில் (5%) | 6,02,250 |
| பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் தளவாட பொருட்கள் ஊதியத்தில்(5%) | 6,02,250 |
| நிர்வாக செலவினம் (5%) | 6,02,250 |
| மொத்தம் | 1,44,23,888 |
| இதர செலவினம் | 1,112 |
| மொத்த செலவினம் | 1,44,25,000 |

**அலுவலகக்குறிப்பு**

பொது சுகாதாரப் பணிகள் தொய்வின்றி செயல்படுத்தவும், பொது சுகாதார அவசர அவசியத்தை முன்னிட்டு புதிய ஒப்பந்தப்புள்ளிகோரி இறுதி செய்யும் கால அளவு வரை அல்லது 01.10.2021 முதல் 30.09.2022 வரை ஒரு வருடகாலத்திற்கு பணிநீட்டிப்பு ஆணை வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொள்ள கூட்டத்தில் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.2127/2016/எச்2).

7) தைப்பூசம் – 2022 பழநி நகராட்சி எல்லைக்குட்பட்ட அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோவில் தைப்பூசத் திருவிழா வரும் 12.01.2022 முதல் 21.01.2022 வரை 10 தினங்கள் நடைபெற உள்ளது.

மேற்காணும் தைப்பூச திருவிழாவிற்கு வெளிமாநில, வெளிநாடு பக்தர்கள், வெளி மாவட்ட பக்தர்கள் மற்றும் பொது மக்கள் அதிக அளவில் வருகை புரிவதாலும், பொது சுகாதார அவசரம் அவசியம் கருதியும் பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் நலன் கருதியும் இந்நகராட்சி பொதுசுகாதாரம் மற்றும் பொறியியர் பிரிவுகள் மூலமாக மேற்கொள்ள வேண்டிய, பொதுசுகாதாரம் அவசரப்பணிகள் மற்றும் முன்னேற்பாடு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் இது குறித்து செயல்திட்டம் (Form-I) அறிக்கை தயார் செய்வதற்கும் மற்றும் உத்தேச செலவினம் ரூ.34,93,435/- (முப்பத்து நான்கு இலட்சத்து தொண்ணூற்று மூன்றாயிரத்து நானூற்று முப்பத்து ஐந்து மட்டும்) பொது நிதியில் இருந்து செலவு செய்வதற்கும் தனி அலுவலர் அவர்களின் கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

தைப்பூசத் திருவிழா - 2022 வருவதை முன்னிட்டு பொது சுகாதார அவசர அவசியம் கருதி செலவினம் செய்வதற்கு கூட்டப்பொருள் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4033/2021/எச்2).

8) இந்நகராட்சியின் பணியாளர்களுக்கு மற்றும் ஒப்பந்த்தாரர்களுக்கும் தனியார் மூலம் (Alayam Associates) E- Filing TDS Contractors 26 Q filing and salary 24 Q return filing charges Generation Consolidation and justification reports மற்றும் TDS Certificate Generation and processing fees and Online Processing and updating மற்றும் GST – 7 Return filling from (April to March 2021) மற்றும் GST TA contractors TDS Certificate download செய்தமைக்கும் தொகையை வழங்க Alayam Associates, Trichy கோரியுள்ளனர், பணிக்கான தொகை விபரம் கீழ்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| (I) 1 | E- Filing TDS Contractors 26 Q filing and salary 24 Q return filing charges Generation Consolidation and justification reports Charges | Rs.17,500/- |
| 2 | TDS Certificate Generation and processing fees and Online Processing and updating Charges | Rs.4000/- |
| | Total | **Rs.21500/-** |
| (II) 1 | GST – 7 Return filling from (April to March 2021) | Rs.18500/- |
| 2 | GST TA contractors TDS Certificate download Charges | Rs.10,000/- |
| | Total | **Rs.28500/-** |

மேற்பாணும் விபரப்படி பதிவுகளும் மற்றும் அதன் விபரங்களும் அனைத்தும் கணினியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் I –ல் ரூ.21500/– மற்றும் II–ல் Rs.28500/–குறிப்பிட்டுள்ள தொகை மொத்தம் ரூ.50,000/– யை Alayam Associates, Trichy –க்கு வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.3309/பி1/2021)

9) **இந்நகராட்சிக்கு** சொந்தமான வ.உ.சி. விஸ்தரிப்பு பேருந்து நிலையத்தில் 110 சதுரடி அளவு கொண்ட ஏசிசி செட் அமைத்த தற்காலிக கடை எண்.62 மாத வாடகைக்கு அனுபவித்துக் கொள்ளும் உரிம**த்திற்கு** 11.08.2021 **ஆம் நாளன்று நடைபெற்ற ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களின் விவரம் கீழ்க்கண்டவாறு,**

**உரிம இனத்தின் பெயர் : பழநி நகராட்சிக்கு சொந்தமான** வ.உ.சி. விஸ்தரிப்பு பேருந்து நிலையத்தில் 110 சதுரடி அளவு கொண்ட ஏசிசி செட் அமைத்த தற்காலிக கடை எண்.62 மாத வாடகைக்கு அனுபவித்துக் **கொள்ளும் உரிமம்.**

**<u>ஒப்பந்தப்புள்ளி</u>**

**ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை**

**<u>ஏலம்</u>**

| வ.எண் | ஏலம் அளித்தவரின் பெயர் மற்றும் விலாசம் | ஏலத் தொகை (மாதம் ஒன்றிற்கு) |
|---|---|---|
| 1 | **திரு.யு.கார்த்திகேயன்,**<br>20, **பள்ளியறை தோட்டம்,**<br>**அடிவாரம்,**<br>**பழநி.** | ரூ.15,750/– |
| 2 | திரு.எ.ரபீக் ராஜா,<br>த/பெ.அப்துல் காதர்,<br>**14,** முகம்மதியர் தெரு,<br>நெய்க்காரப்பட்டி, பழநி | **ரூ.16,000/–** |

மேற்கண்டவாறு நடைபெற்ற ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட நபர்களில் வரிசை எண்.2–ல் கண்டுள்ள திரு.எ.ரபீக் ராஜா, த/பெ.அப்துல் காதர்,14, முகம்மதியர் தெரு, நெய்க்காரப்பட்டி, பழநி என்பவர் மாதம் ஒன்றிற்கு ரூ.16,000/–க்கு உயர்ந்தபட்ச **ஏலம்** கோரியுள்ளார்.

மேற்கண்ட **ஏலத்**தொகை அரசு மதிப்பு ரூ.18,500–ஐ காட்டிலும் ரூ.2,500/– குறைவாக உள்ளது. கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வியாபாரம் பாதித்துள்ளது. எனவே, மறுஏலம்/மறுஒப்பந்தப்புள்ளி கோருவதினால் ஏற்படும் கால தாமதத்தை தவிர்க்கும் பொருட்டும், **நகராட்சி நிதி நிலையினை உயர்த்தும் பொருட்டும் திரு.எ.ரபீக் ராஜா** என்பவரின் உயர்ந்த **ஏலத்**தொகை ரூ.16,000/–ஐ ஏற்க மன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலுகக்குறிப்பு :</u>

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.நகராட்சி நிதி நிலையினை உயர்த்தும் பொருட்டு முன் அனுமதி பெறப்பட்டு குத்தகை உரிமம் ஒப்படைக்கப்பட்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4512/2020/அ1)

10) **இந்நகராட்சிக்கு** சொந்தமான வ.உ.சி. விஸ்தரிப்பு பேருந்து நிலையத்தில் 110 சதுரடி அளவு கொண்ட ஏசிசி செட் அமைத்த தற்காலிக கடை எண்.63 மாத வாடகைக்கு அனுபவித்துக் கொள்ளும் உரிம**த்திற்கு** 11.08.2021 **ஆம் நாளன்று நடைபெற்ற ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களின் விவரம் கீழ்க்கண்டவாறு,**

**உரிம இனத்தின் பெயர் : பழநி நகராட்சிக்கு சொந்தமான** வ.உ.சி. விஸ்தரிப்பு பேருந்து நிலையத்தில் 110 சதுரடி அளவு கொண்ட ஏசிசி செட் அமைத்த தற்காலிக கடை எண்.63 மாத வாடகைக்கு அனுபவித்துக் **கொள்ளும் உரிமம்.**

**ஏலம்**

| வ.எண் | ஏலம் அளித்தவரின் பெயர் மற்றும் விலாசம் | ஏலத் தொகை (மாதம் ஒன்றிற்கு) |
|---|---|---|
| 1 | திரு.எம்.இ.மெதார் மைதீன்,<br>த/பெ.இதயத்துல்லா,<br>17, காஜிமார் தெரு, பழநி | ரூ.15,500/- |
| 2 | திரு.எம்.அப்பாஸ்,<br>த/பெ.முஸ்தபா,<br>15,சர்க்கரை ராவுத்தர் குறுக்கு சந்து,<br>பழநி. | ரூ.16,000/- |

**ஒப்பந்தப்புள்ளி**

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் மற்றும் விலாசம் | ஒப்பந்தப்புள்ளி தொகை (மாதம் ஒன்றிற்கு) |
|---|---|---|
| 3 | திரு.எ.சாகுல் ஹமீது,<br>த/பெ.எ.அப்பாஸ்,<br>15,சர்க்கரை ராவுத்தர் குறுக்கு சந்து,<br>பழநி. | ரூ.12,500/- |

மேற்கண்டவாறு நடைபெற்ற ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட நபர்களில் வரிசை எண்.2-ல் கண்டுள்ள **திரு.எம்.அப்பாஸ்,** த/பெ.முஸ்தபா, 15,**சர்க்கரை ராவுத்தர் குறுக்கு சந்து,** பழநி என்பவர் மாதம் ஒன்றிற்கு ரூ.16,000/-க்கு உயர்ந்தபட்ச **ஏலம்** கோரியுள்ளார்.

மேற்கண்ட **ஏலத்**தொகை அரசு மதிப்பு ரூ.16,700-ஐ காட்டிலும் ரூ.700/- குறைவாக உள்ளது. கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வியாபாரம் பாதித்துள்ளது. எனவே, மறுஏலம்/மறுஒப்பந்தப்புள்ளி கோருவதினால் ஏற்படும் கால தாமதத்தை தவிர்க்கும் பொருட்டும், 3 **வது முறையாக ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. நகராட்சி நிதி நிலையினை உயர்த்தும் பொருட்டும் திரு.எம்.அப்பாஸ்** என்பவரின் உயர்ந்த **ஏலத்**தொகை ரூ.16,000/-ஐ ஏற்க மன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :</u>

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.நகராட்சி நிதி நிலையினை உயர்த்தும் பொருட்டு முன் அனுமதி பெறப்பட்டு குத்தகை உரிமம் ஒப்படைக்கப்பட்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4512/2020/அ1)

நகராட்சி அலுவலகம், பழனி.
நாள்.13 -09-2021

தனி அலுவலர்
பழனி நகராட்சி.